நாள்- 31.07.2023

Case No.OS.253/2014 (PW1 Cross continuation)

PW.1-கணேசன் – பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 15.5.1995 ல் லட்சுமியம்மாள் பெயரில் சொத்துகள் வாங்கப்பட்டது என்று சொன்னால் முதலில் கிரைய உடன்படிக்கை முதலில் என் பெயரில் ஏற்பட்டது. நான் நடத்துனராக போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து வந்த வருமானத்தையும் மற்றும் விவசாயத்தில் வந்த வருமானத்தை வைத்து என் அம்மா பெயரில் சொத்து நான்தான் என் அம்மா லட்சுமியம்மாள் பெயரில் வாங்கினேன். லட்சுமியம்மாள் தனிப்பட்ட முறையில் சொத்து வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3 ஏக்கர் 34 செண்ட் விவசாய நிலம் என் அம்மா பெயரில் இருந்தது. விவசாய நிலத்தில் எவ்வளவு வருமானம் வந்தது அதற்கான கணக்கு வழக்கு உள்ளதா என்றால் இல்லை. நான், என் அம்மா, பிரதிவாதி என் தம்பி ஆகியோர்கள் விவசாய நிலங்களில் வேலை செய்து வந்தோம். என்னுடைய வருமானத்திலிருந்தோ , விவசாய வருமானத்திலிருந்தோ என் அம்மா பெயரில் நிலத்தை வாங்கவில்லை என்றும் என் தம்பிதான நிலத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. ஜெகன்நாதன் என்பவரிடம் இருந்து கிரைய உடன்படிக்கை பெற்று என் அம்மா பெயரில் நிலத்தை வாங்கினேன். நான் விவசாய வேலை எதுவும் நிலத்தில் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தம்பிதான் விவசாய வேலை செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது விவசாய நிலத்தில் வெள்ளரிபழம் மற்றும் மீன் வியாபாரம் செய்தும் மற்றும் நிலங்களை குத்தகை எடுத்தும் ஜெகன்நாதனிடமிருந்து என் தம்பி பிரதிவாதிதான் நிலம் வாங்கி என் அம்மா பெயரில் எழுதினார் என்றால் சரியல்ல. நான் எனது வருமானத்தின் மூலம் என் அம்மா பெயரில் நிலம் வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல(பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது). லட்சுமியம்மாள் பெயரளவில்தான் பத்திரம் இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. லட்சுமியம்மாளின் பெயரில் உள்ள நிலங்கள் விவசாயத்திற்கு உரிய நிலங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தென்கடப்பந்தாங்கல் விவசாய நிலக்கடன் பெற்று என் அம்மா லட்சுமியம்மாள் பெயரில் நிலங்களை வாங்கி கரும்பு பயிர் செய்து அந்த வருமானத்தை வைத்து நிலங்கள் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் அந்த ஊரில் இல்லை என்றும் பயிர் எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள நிலங்கள் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் சின்னம்மாள் பெயரில் உள்ளது. நிலமும் உள்ளது

வீடும் உள்ளது. சர்வே எண்களை நான் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்லமுடியும்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)